ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | **20.02.2017** |

## இலங்கை மத்திய வங்கியின் தரவு நூலகம் ஆரம்பம்

இலங்கை மத்திய வங்கி இன்று, இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரி வெப்தளத்தினூடாக தரவு நூலகமொன்றினை ஆரம்பித்திருக்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் தரவு நூலகம் அனைத்தையுமுள்ளடக்கியதொரு தரவுத்தளமாக அமைந்திருப்பதுடன் உண்மை, நாணயம், இறை, வெளிநாட்டு மற்றும் நிதியியல் துறைகள் என்பனவற்றைக் கொண்ட பரந்த பல்வேறுபட்ட விடயங்கள் மீதான உரிய நேரத்திலான தரவுகளை உள்ளடக்கியிருக்கிறது. இது சுய தேவைகளுக்கான உருவாக்கம் அட்டவணைகளைத் தயாரித்தல் பதிவிறக்கம் செய்தல் மற்றும் மேலும் உசாத்துணைகளுக்காக அவற்றை சேமித்து வைத்தல் போன்றவற்றை இயலுமைப்படுத்துவதன் மூலம் எண்ணிறந்த தரவுத் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கின்றது.

தரவுகளை பயன்படுத்துவோர் தரவு நூலகத்தினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமான (www.cbsl.gov.lk) அல்லது குறிப்பாக யுஆர்எல் ஊடாக (https://www.cbsl.lk/eresearch) அணுகமுடியும்.